# அபிவிருத்தி லொத்தர் சபை - 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட உயர்ந்த பட்ச தகவல்கள் மற்றும் விளக்கங்களின் பிரகாரம் அபிவிருத்தி லொத்தர் சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கு உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அபிவிருத்தி லொத்தர் சபையின் நிலைவரம், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகள் மீதான நிதிசார் விளைவுகள் மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபையானது அவ்வப் பகுதிகளிலிருந்து விநியோகிக்கப்படுகின்ற இருப்புக்களின் உண்மையான கிரயத்தை இருப்புப் பேரேட்டுக்கணக்கின் ஊடாக கிரயத்தில் சீராக்காமல் வருட ஆரம்ப மீதியுடன் கொள்வனவுகளைக் கூட்டி இறுதியிருப்பைக் கழித்து பெறப்பட்ட பெறுமதியை இருப்புக்கிரயமாக கணக்குகளில் சீராக்கியமையினால் காணாமல் போன இருப்புக்கள், களவு போன இருப்புக்கள் அல்லது அழிவடைந்த இருப்புக்களினால் ஏற்பட்ட நட்டங்கள் போன்றவை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 குறைத்துக்காட்டல் மற்றும் அதிகரித்துக்காட்டுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டின் தேசத்தற்கு மகுடம் கண்காட்சியின் போது நுழைவுச்சீட்டுக்களில் பரிசுகள் வழங்குவதற்காக அவ்வருடத்தின் போது

கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 5,480 படியான 332 பீங்கான் தொகுதிகள் மற்றும் ரூபா. 6,000 படியான 1,789 தேனீர்க் கோப்பைத் தொகுதிகளின் கூட்டு மொத்த பெறுமதியான ரூபா.12,553,360 தொகையினை மீளாய்வாண்டின் இலாபத்திற்கு எதிராக பதிவழித்திருந்தமையினால் செலவினங்களை அதிகரித்துக் காட்டப்பட்டதுடன் மற்றும் அதே தொகையால் சொத்துக்களைக் குறைத்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா.16,381,903 தொகையான மேலதிக ஏற்பாடு முறைப்படி சீராக்கம் செய்யப்படாமையினால் அப்பெறுமதியினால் முன்னைய ஆண்டின் இலாபம் குறைத்துக்காட்டப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இலாபம் அதிகரித்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையானது வர்த்தக மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சுடன் செய்து கொள்ளப்பட்ட குத்தகை ஒப்பந்தம் காலாவதியாகி 6 வருடங்கள் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கைப்படி அமைச்சிற்கு செலுத்தப்பட்ட ரூபா.723,780 ஆன தொகையினை மீள அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 5 வருடத்தினை விட பழைமையான ரூபா.1,630,507 தொகையான பதின்மூன்று கடன்கொடுத்தோர்கள் மீதிகளை தீர்ப்பனவு செய்யவோ அல்லது வேறு பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் கணக்குகளில் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) கட்டிடம் குத்தகைக்கு விட்ட வகையில் அறவிடவேண்டியிருந்த ரூபா.4,976,220 தொகையான வாடகையினை 4 வருடங்களுக்கும் மேலான காலத்திலிருந்து அறவீடு செய்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 28,737,539 பெறுமதியான கடன்டபடடோர் கணக்குகள் மீளாய்வாண்டின் இறுதியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

கணக்கய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(அ) | 82 சந்தர்ப்பங்களில் ரூபா. 105,530 தொகையான சில்லறைக்காசு முற்பணம் வழங்கப்பட்ட போது தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சில்லறைக்காசு முற்பணம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் உரிய செயற்பாடு பூர்த்தியடைந்ததும் முற்பணத்தை தீர்ப்பனவு செய்ய வேண்டிய போதிலும் சபையின் ஊழியர்களுக்காக கொடுக்கப்பட்டிருந்த ரூபா. 393,078 தொகையான அத்தகைய முற்பணத் தீர்ப்பனவில் 28 நாட்கள் தொடக்கம் 245 நாட்கள் வரையான காலம் தாமதம் காணப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | ஒரு தடவையில் ரூபா. 20,000 இற்கு அதிகமாக உப-கட்டுநிதி அங்கீகரிக்க முடியாதிருந்த போதிலும் நிதிப் பிரமாணத்திற்கு முரணாக 10 சந்தர்ப்பங்களில் ரூபா.397,896 கூட்டுத்தொகையான உப-கட்டுநிதியினை அவ் எல்லையினை விஞ்சி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப்பிரமாணம் 396 | காசோலை வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் காசாக மாற்றப்படாத விடத்து அவற்றினை நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் திரும்ப வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் ரூபா. 159,970 பெறுமதியான காசோலைகள் 03 வருடங்களுக்கும் மேலான காலமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக பதிவேடுகளில் காட்டப்பட்டிருந்தது. |
| (v) | நிதிப்பிரமாணம் 762 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இருப்பு மட்டம் பராமரிக்கப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. (உதாரணம்:- ஆகக்குறைந்த, ஆகக் கூடிய மற்றும் சாதாரண ) அவ்வாறே சில இருப்பு வகைகளில் இருப்புக் குறைவுகள், இதே போன்று ஏனைய இருப்புக்களில் இருப்பு மிகைகள் காணப்படுகினிறமையும் அவதானிக்கப்பட்டன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவு | அரசாங்க வழங்கல்கள் மற்றும் சேவைகள் சம்பந்தமாக வழங்கக்கூடிய ஆகக் கூடிய வேலை ஆரம்பிப்பு முற்பணம் மொத்த ஒப்பந்தத் தொகையில் 20 % இனை விஞ்ச முடியாதிருந்த போதிலும் சபையினால் 09 சந்தர்ப்பங்களில் |

ரூபா. 12,766,750 கூட்டுத்தொகையான ஒப்பந்தப்பெறுமதியில் 50% தொடக்கம் 75% வரையில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகள் ரூபா.937.93 மில்லியன் ஆன தேறிய இலாபமானதுடன், அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டின் நிதிசார் விளைவுகள் ரூபா 551.70 மில்லியன் ஆன தேறிய இலாபமாக இருந்தமையினால் தேறிய இலாபத்தில் ரூபா.386.23 மில்லியன் அல்லது 76% ஆன அதிகரிப்பைக் காட்டியது.

ரூபா. 173.13 மில்லியன் மற்றும் ரூபா. 144.07 மில்லியன் தொகையான கோராத பரிசுப்பொதிகள் முறையே முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போதான இலாபத்தைக் கணிப்பீடு செய்யும் போது இலாபத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது.

#### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 வருடங்களினுள் சபையின் லொத்தர் சீட்டு விற்பனைகளிலிருந்து கிடைத்த வருமானம், அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச் சட்டத்தின் 18(2) பிரிவின் பிரகாரமான செயற்பாட்டுச் செலவுகளைக் கழித்த பின்னர் சனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிதியங்களுக்கு அனுப்பப்பட்ட தொகைகள் மற்றும் வருமானத்தின் சதவீதமாக சனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய நியதிச்சட்ட

நிதியங்களுக்கு அனுப்பப்பட்ட நிதிகள் கீழ்வருமாறு காண்பிக்கப்படுகின்றது.

| **ஆண்டுகள்** | **லொத்தர் சீட்டுக்கள் விற்பனை மூலம் கிடைத்த வருமானம்** | **சனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிதியங்களுக்கு அனுப்பப்பட்ட தொகைகள்** | **வருமானத்தின் சதவீதமாக சனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிதியங்களுக்கு அனுப்பப்பட்ட தொகைகள்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **சதவீதம்** |
| 2006 | 3,761,749,339 | 942,467,000 | 25.05 |
| 2007 | 3,947,213,671 | 845,327,000 | 21.41 |
| 2008 | 4,259,779,178 | 655,883,000 | 15.39 |
| 2009 | 4,886,477,659 | 775,001,000 | 15.04 |
| 2010 | 5,266,907,459 | 885,511,000 | 16.86 |

லொத்தர் சீட்டுக்கள் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் வருமானத்தின் சதவீதமாக சனாதிபதி நிதியம் மற்றும் நியதிச்சட்ட நிதியங்களுக்கு அனுப்பப்பட்ட தொகைகள் 2006 ஆம் ஆண்டின் போது 25.05 % இலிருந்து 2009 ஆம் ஆண்டின் போது 15.04 % வரை குறைவடைந்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு வரையில் 16.86 % ஆன சிறு அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது

சனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிதியங்களுக்கு சபையின் ஊடாக மேற்கொள்ளப்பப்பட்ட ஆகக் குறைந்த பங்களிப்பு மற்றும் பங்களிப்பு நிதிகளில் சீரான குறைவு அவதானிக்கப்பட்டமையினால் சபையின் செலவுக்கட்டமைப்பில் துரித மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், சபையின் மீளாய்வாண்டினதும் மற்றும் முன்னைய 03 ஆண்டுகளுக்கான சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறு உள்ளன.

| | | | ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2007 | 2008 | 2009 | 2010 |
| (அ) | | இலாப விகிதம் | | | | |
| | (i) | தேறிய இலாப விகிதம்(சத வீதத்தில்) | 17.96 | 13.25 | 11.29 | 17.96 |
| | (ii) | உரிமை மூலதனத்திற்கான வருவாய் | 1.36 | 1.17 | 1.13 | 0.83 |
| | (iii) | சராசரிச் சொத்துக்களின் மீதான வருவாய் | 0.77 | 0.55 | 0.44 | 0.71 |
| (ஆ) | | மூலதனம் | | | | |
| | (i) | உரிமை மூலதனம்/ மொத்தச் சொத்துக்கள் | 0.58 | 0.52 | 0.43 | 0.70 |
| | (ii) | உரிமை மூலதனம்/ நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 0.70 | 0.67 | 0.54 | 0.88 |
| (இ) | | திரவச் சொத்துக்கள் | | | | |
| | (i) | நடைமுறைச் சொத்து விகிதம் | 0.42 | 0.44 | 0.43 | 0.52 |
| | (ii) | விரைவுச் (திரவச்) சொத்து விகிதம் | 0.25 | 0.32 | 0.30 | 0.38 |

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆணடில் ஆரம்பிக்கப்பட்டிருந்த டபள் சான்ஸ் லொத்தருக்காக கடந்த ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா. 28,885,617 மற்றும் ரூபா. 22,115,426 ஆன தொகைகள் விளம்பரச் செலவினமாகச் செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலிருந்து அந்த லொத்தர் நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட விளம்பரச் செலவினம் ஒரு பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் கணனி மென் பொருள்களின் கிரயம் ரூபா. 17,718,257 ஆக இருந்ததுடன் அக் கணனி மென்பொருளைப் பராமரிப்பதற்காக வருடத்தின் போது செலவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா.17,847,760 அல்லது மொத்த கணனி மென்பொருள் கிரயத்தில் 101 சதவீதமாக இருந்தது.

### 2.2.2 பயன்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிரயம் ரூபா. 1,098,040 பெறுமதியான பதினொரு இருப்பு விடயங்கள் பல வருட காலமாக உபயோகத்திற்கு எடுக்கவோ அல்லது வேறு நடவடிக்கைகளோ எடுக்காமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா. 4,340,160 பெறுமதியான 294 எரிவாயு அடுப்புக்கள, 70 சோறு சமைக்கும் மின்சார அடுப்புக்கள் என்பன பயன்பாடற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டடிருந்தன. இவ் உபகரணங்களைக் கொள்வனவு செய்ததற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த டபள் சான்ஸ் லொத்தருக்காக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா.8,484,491 பெறுமதியான லொத்தர் சீட்டு

இருப்புக்கள் அந்த லொத்தர் நடைமுறைப்படுத்துவது நிறுத்தப்பட்டமையினால் பயன்பாடற்று களஞ்சியத்தில் காணப்பட்டது.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் போது கட்டப்பட்டிருந்த ரூபா. 16,795,252 பெறுமதியான படப்பிடிப்புக்கூடம் மற்றும் ரூபா. 5,826,305 கிரயத்திலான மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்கான கட்டிடமொன்றும் இன்னும் உபயோகத்திற்கு எடுக்கப்படாமல் இருந்தது.

### 2.2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கு இடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுபாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபைத்தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) உப- கட்டுநிதி
(உ) செலவு முகாமைத்துவம்
(ஊ) இருப்புக்கள்
(எ) முற்பணங்கள்